**தலைப்பு – 174 புனர்வாழ்வளிப்பு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2013 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கை இரு பகுதிகளைக் கொண்டதாகும்.

பகுதி 1 - அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை.

பகுதி 2 - ஒவ்வொரு தலைப்பிற்குமான விபரமான அறிக்கை.

## பகுதி 1

**புனர்வாழ்வளிப்பு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை**

---

### 1. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்

| தலைப்பு | திணைக்களப் பெயர் |
|---|---|
| 232 | சிறைச்சாலைகள் திணைக்களம் |
| 326 | சமூக அடிப்படையிலான சீர்திருத்தத் திணைக்களம் |

### 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**(அ) மொத்த ஏற்பாடும் செலவும்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள இரு திணைக்களங்களுக்காக செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 5,480,654,000 ஆனதுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 4,952,239,985 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சினதும் ஒவ்வொரு திணைக்களங்களினதும் தேறிய ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்பு ரூபா 3,214,558 இற்கும் ரூபா 495,118,478 இற்கும் இடையிலான

வீச்சில் அதாவது தேறிய ஏற்பாட்டில் 3.27 சதவீதத்திலிருந்து 10.22 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| தலைப்பு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| 174 | 539,880,000 | 509,799,021 | 30,080,979 | 5.57 |
| 232 | 4,842,724,000 | 4,347,605,522 | 495,118,478 | 10.22 |
| 326 | 98,050,000 | 94,835,442 | 3,214,558 | 3.27 |
| கூட்டுத்தொகை | **5,480,654,000** | **4,952,239,985** | **528,414,015** | **9.64** |

## (ஆ) வேறு அமைச்சு மற்றும் திணைக்களத்தால் வழங்கப்பட்ட ஏற்பாட்டின் பயன்பாடு

வேறுபட்ட செயற்பாடுகளுக்காக வேறு இரு அமைச்சுக்களால் ரூபா 4,930,000 கூட்டுத்தொகையான ஏற்பாடு அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அவ் ஏற்பாடு பயன்படுத்தப்பட்டமை தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| அமைச்சு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஏற்பாடு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பயன்பாடு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சேமிப்பு | சேமிப்பு பெறப்பட்ட ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| தேசிய மொழிகள், சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு | 4,910,000 | 3,612,164 | 1,297,836 | 26 |
| சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சு | 20,000 | 9,033 | 10,967 | 54.8 |
| கூட்டுத்தொகை | 4,930,000 | 3,621,197 | 1,308,803 | 26.55 |

**2.2 முற்பணக் கணக்குகள்**

**2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள இரு திணைக்களங்களிற்கான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட பின்வரும் எல்லைகள் பின்பற்றப்பட்டிருந்தன. விபரம் பின்வருமாறாகும்.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 174 | 3,500,000 | 3,491,470 | 1,000,000 | 1,602,250 | 15,000,000 | 8,106,258 |
| 232 | 140,000,000 | 94,177,993 | 110,000,000 | 115,815,477 | 500,000,000 | 264,414,055 |
| 326 | 5,000,000 | 3,184,819 | 2,500,000 | 4,018,326 | 25,000,000 | 14,061,928 |

**2.3.2 வியாபார முற்பணக் கணக்குகள்**

அமைச்சின் கீழுள்ள சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் வியாபார முற்பணக் கணக்கொன்று பேணப்பட்டிருந்தது.

**(அ) பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

வியாபார முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட பின்வரும் எல்லைகளில் செலவு மீதிக்கான எல்லை தவிர்ந்த ஏனைய எல்லைகள் பின்பற்றப்பட்டிருந்தன. விபரம் பின்வருமாறாகும்.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | | செலவு மீதி | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 23202 | 90,000,000 | 65,316,443 | 115,000,000 | 124,038,887 | 30,000,000 | 56,311,348 | 12,000,000 | 651,865 |

### (ஆ) நிதி விளைவு

வியாபார முற்பணக் கணக்கின் நிதிவிளைவு பின்வருமாறாகக் காணப்பட்டது.

| விடய இல. | முற்பணக் கணக்கின் நடவடிக்கைகள் | நிதி விளைவு | | | |
|---|---|---|---|---|---|
| | | 2013 | | 2012 | |
| | | இலாபம் (நட்டம்) கருதுகோள் கட்டணம் தவிர்ந்த | இலாபம் (நட்டம்) கருதுகோள் கட்டணத்துடன் | இலாபம் (நட்டம்) கருதுகோள் கட்டணம் தவிர்ந்த | இலாபம் பிற்போடற் கட்டணத்துடன் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 23202 | சிறைச்சாலைகள் தொழில்நுட்ப மற்றும் கமநல முற்பண நடவடிக்கைகள் | 38,030,390 | (5,513,757) | 45,566,785 | 22,995,444 |

## 2.4 கட்டுநிதி மற்றும் பொது வைப்புக் கணக்குகள்

### 2.4.1 கட்டுநிதிக் கணக்கு

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 02 திணைக்களங்களின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதிகளின் கூட்டுத்தொகை ரூபா 28,508,336 ஆக நிலவியது. விபரம் பின்வருமாறாகும்.

| அமைச்சு | கட்டுநிதிக் கணக்கு இல | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| புனர்வாழ்வளிப்பு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு | 7002/0000/00/0411/0013/000 | 2,143 |
| சிறைச்சாலைகள் திணைக்களம் | 7002/0000/00/0078/0013/000 | 1,656,050 |
| மேற்படி | 7002/0000/00/0079/0013/000 | 26,733,702 |
| சமூக அடிப்படையிலான சீர்திருத்தத் திணைக்களம் | 7002/0000/00/0412/0013/000 | 116,441 |
| கூட்டுத்தொகை | | 28,508,336 |

## 2.3.2 பொது வைப்புக் கணக்குகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 02 திணைக்களங்களுக்கு உரித்தான 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 141,932,473 ஆனதுடன் இது தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| அமைச்சு/ திணைக்களம் | வைப்புக் கணக்கு இல. | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| புனர்வாழ்வளிப்பு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு | 6000/0000/00/0015/0179/000 | 1,103,835 |
| சிறைச்சாலைகள் திணைக்களம் - | | |
| வைப்புப் பிணை | 6000/0000/00/0001/0061/000 | 70,738,819 |
| வைப்பு – கேள்வி | 6000/0000/00/0002/0017/000 | 4,622,021 |

| | | |
|---|---|---|
| சிறைக்கைதிகள் நலன்புரி நிதியம் | 6000/0000/00/0006/0028/000 | 6,589,141 |
| சிறைக்கைதிகள் ஊதியம் மற்றும் சொந்தப் பணக் கணக்கு | 6000/0000/00/0006/0081/000 | 4,646,188 |
| நானாவித வைப்புக் கணக்கு | 6000/0000/00/0006/0081/000 | 54,073,509 |
| சமூக அடிப்படையிலான சீர்திருத்தத் திணைக்களம் | 6000/0000/00/0015/0180/000 | 158,960 |
| | | ---------------- |
| கூட்டுத்தொகை | | **141,932,473** |
| | | ========== |

**பகுதி 2**

**ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்பிற்குரிய விபரமான அறிக்கை**

---

**1. ஒதுக்கீட்டுத் தலைப்பு 174 – புனர்வாழ்வளிப்பு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு**

---

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

---

புனர்வாழ்வளிப்பு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணைக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 செப்தெம்பர் 18 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்

கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தது.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்களிப்பு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய உள்ளகக்கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புகள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிஅறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், புனர்வாழ்வளிப்பு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பன இதன் (அ) முதல் (ஈ) வரையில் காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 முதல் 1.12 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகள் என்பவற்றை தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

### (அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

(i) அமைச்சால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணங்கள் |
|---|---|
| நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| நட்டங்கள் இழப்புகள் பதிவேடு | நிதிப் பிரமாணம் 110 |

**(ஆ) கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்**

அமைச்சிற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 03 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2014 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் அவ் ஐயவினாக்களுக்கு உரித்தான கணிப்பிடப்படக்கூடிய கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதி ரூபா 4,716,594 தொகையாகக் காணப்பட்டது.

**(இ) பாதீட்டு முரண்கள்**

05 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த காரணத்தால் ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்து சேமிப்புகள் அச் செலவின விடயங்களுக்கு உரித்தான தேறிய ஏற்பாட்டின் 13 சதவீதத்தித்திலிருந்து 100 சதவீதம் வரையான வீச்சளவைக் கொண்டிருந்தது.

**(ஈ) கட்டு நிதிக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதிப் பிரமாணம் 371 இற்கு முரணாக பதவிநிலைத் தரமில்லாத உத்தியோகத்தர்கள் இருவருக்கு 4 சந்தர்ப்பங்களின் போது ரூபா 70,000 தொகையான குறித்த பணிக்கான கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.

(ii) நிதிப் பிரமாணம் 371 இன் பிரகாரம் பணி முடிவுற்றதை உடனடுத்துப் பெற்றுக்கொள்ளப்பட்ட குறித்த பணிக்கான துணைக்கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும் பணி

முடிவுற்று 2 மாத கால தாமதத்தையடுத்து 2 சந்தர்ப்பங்களின் போது ரூபா 35,000 கூட்டுத்தொகையான துணைக்கட்டுநிதி தீர்க்கப்பட்டிருந்தது.

(iii) முற்பணம் பெறப்பட்டு எனினும் செலவிடப்படும் தேவைப்பாடற்றமையால் எதிர்வரும் வாரத்தின் முதலாம் திகதி முதல் அப் பணம் மீள வைப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும் 7 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 85,000 தொகையான முற்பணம் தாமதமாகத் தீர்க்கப்பட்டிருந்தது.

**1.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

---

**உள்ளகக் கணக்காய்வு**

---

அமைச்சில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் போதியளவில் உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டு உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

---

**(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்படல்**

---

2010 திசெம்பர் 17 ஆம் திகதிய பீஎப்/ மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆம் திகதிய 441 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் படி, வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2014 மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டு பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் புனர்வாழ்வு ஆணையாளர் அலுவலகம் மற்றும் இதற்குரித்தான நிறுவகங்களில் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 1.6 இணக்கமின்மைகள்

---

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மை

---

2012 திசெம்பர் 28 ஆம் திகதிய 157 ஆம் இலக்க நிதி, திட்டமிடல் அமைச்சுச் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்திக்கு மாறாக நாளேடு, வாழ்த்து மடல்கள் போன்ற அத்தியவசியமற்றிற்காக அரசாங்கத்தால் ஏற்கப்பட்ட செலவினங்கள் வரையறுக்கப்பட வேண்டிய போதிலும் 2014 ஆம் ஆண்டிற்காக நாளேடு மற்றும் வாழ்த்து மடல்களுக்காக ரூபா 535,722 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 1.7 செயற்திட்டம் நடைமுறைப்படுத்தலிலான நலிவுகள்

---

செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி, மீளாய்வாண்டின் போது அமைச்சால் திட்டமிடப்பட்டிருந்த ''புனருத மித்ரத்வ'' கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.8 செயல்நடவடிக்கைத்திட்டம்

---

2011 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த பின்வரும் செயற்பாடுகள் போதியளவில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(அ) சிறைச்சாலைகள் திணைக்களத்தின் தற்போதய தேவைப்பாட்டிற்கு இணங்கும் வகையில் மறுசீரமைப்பிற்கு தேவையான சட்டதிட்டங்களை தயாரித்தல்.˙.

(ஆ) புனர்வாழ்வு நடவடிக்கைகளின் தற்கால தேவைப்பாட்டின் படி விஸ்தரிக்கப்படுவதற்காக 1987 இன் 29 ஆம் இலக்க ஆட்கள், ஆதன மற்றும் கைத்தொழில் புனர்வாழ்வு அதிகாரசபை அதிகாரச்சட்டத்தைத் திருத்துதல்.

(இ) சிறிய குற்றங்களுக்குத் தண்டனை பெறுபவர்களைச் சிறையில் வைத்திருப்பதற்குப் பதிலாக மக்கள் சீர்திருத்தச் செயற்பாடுகளுக்கு தொடர்புபடுத்தப்படுவதற்காக மக்கள் சீர்திருத்தக் கட்டளைச் சட்டத்தை திருத்துதல்.

## 1.9 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

---

அமைச்சால் ஏற்படுத்தப்பட்டிருந்த சில கொடுக்கல்வாங்கல்கள் முறையற்ற விதத்தில் காணப்பட்டன. அவதானிக்கப்பட்ட அத்தகைய சந்தர்ப்பங்கள் சில பின்வருமாறாகக் காணப்பட்டன.

(அ) அமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்தின் நீர்த் தாங்கி மற்றும் காவல்உடத்தை நிர்மாணிப்பதற்காக அரச பொறியியல் கூட்டுஸ்தாபனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதன் ஒப்பந்தப் பெறுமதி ரூபா 2,124,611 ஆகக் காணப்பட்டது. அவ் ஒப்பந்தம் தொடர்பாக ஏற்படுத்தப்பட்டிருந்த எழுத்து மூல ஒப்பந்த உடன்படிக்கை, விபரமான மதிப்பீடு, அளவீட்டுப் பத்திரம், செய்யப்பட்ட வேலை தொடர்பான முன்னேற்ற அறிக்கை போன்ற எழுத்து மூல ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2013 திசெம்பர் 23 ஆம் திகதிய அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திடமிருந்து வேலை பூர்த்தி செய்யப்பட்டதை முறைப்படி சான்றுறுதிப்படுத்தப்படாது சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரூபா 2,357,932 தொகையான பட்டியல்களின் பெறுமதியில் ரூபா 2,309,440 அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) அமைச்சிற்குறித்தான ஓர் ஜீப் வண்டியொன்று ரூபா 1,771,885 தொகை செலவில் 2010 யூன் மாதம் இயந்திரத்தின் முழுத் திருத்த வேலை (ஓவர் ஹோல்) செய்யப்பட்டிருந்தது. பரிசோதிக்கப்படாத ஓட்டத்தின் காரணமாக 17,000 கி.மீ. பயணிப்பதற்கு முன்னர் மீள இயந்திரம் முழுமையாக பழுதுபார்க்கப்பட வேண்டிய நிலையை அடைந்திருந்தது. மீள பழுதுபார்க்கப்படாது சுற்றாடல் அமைச்சின் பொறியியலாளரின் பரிந்துரையில் ரூபா 680,000 தொகையான செலவில் 4டீ56 டேர்போ இன்டர்கூலர் இயந்திரமொன்று 2012 யூன் மாதம் பொருத்தப்பட்டிருந்ததுடன் இதற்கு மோட்டார் போக்குவரத்து ஆணையாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இவ் இயந்திரத்தின் இயக்கம் முன்னர் காணப்பட்ட இயந்திரத்தின் இயளவை பார்க்கிலும் குறைவாக இருந்தமையும், அதனைப் பொருத்தியதன் பின்னர் 10 சந்தர்ப்பங்களில் ரூபா 419,017 தொகையான திருத்தவேலைகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. தற்போது இவ் வாகனம் செயலிழந்து காணப்படுகின்றது.

## 1.10 மோசடித் தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

-------------------------------------------------------------------

மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களத்தின் முன் அங்கீகாரம் இன்றி அமைச்சின் ஜீப் வண்டி ஒன்றினதும் டபிள் கப் வண்டி ஒன்றினதும் என்ஜின்கள் கழற்றப்பட்டிருந்தன. அகற்றப்பட்ட என்ஜின்கள் சிறிய பாகங்களிற் சில மாத்திரம் ஒப்படைக்கப்பட்டு 2013 ஆகஸ்ட் 07 ஆம் திகதி அப் பாகங்கள் ரூபா 2,000 இற்கு ஏலவிற்பனை செய்யப்பட்டிருந்தன.

## 1.11 முகாமைத்துவ நலிவுகள்

-----------------------------------

தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் நலிவுகள் கண்டறியப்பட்டன.

(அ) புனர்வாழ்வளிப்பு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரின் ஆலோசகர் பதவிக்காக 2013 சனவரி 16 ஆம் திகதிய எம்ஆர்பீஆர்/2/3/2/6 ஆம் இலக்க நியமனக் கடிதத்தின் படி ஒரு வருட ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர் 2013 யூலை 03 ஆம் திகதி கேட்டு விலகியிருந்தார். இந் நியமனக் கடிதத்தின் 04 ஆம் பந்தியின் படி பதவியிலிருந்து கேட்டு விலகியிருப்பின் ஒரு மாதத்திற்கு முன்னர் அறிவிக்கப்படவோ அல்லது ஒரு மாத சம்பளத்தை அரசாங்கத்திற்கு செலுத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செயற்பட்டிராததுடன் மீள 2013 செப்தெம்பர் 28 ஆம் திகதி முதல் சேவையில் அமர்த்தப்பட்டிருந்தார்.

(ஆ) 2013 சனவரி 04 ஆம் திகதி கொழும்பில் உள்ள ஓர் உணவகத்தில் ஊடக சந்திப்பொன்றிற்காக ‘‘கொக்டேல்’’ நடாத்தப்பட்டிருந்தது. உணவுகளுக்கும் பானங்களுக்குமாக ஏற்கப்பட்ட ரூபா 165,032 தொகையான செலவினம் வேறு செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) அமைச்சின் ஊடகப் பிரிவிற்குத் தேவையான வீடியோ தொகுப்பு இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்வதற்காக 2011 ஆம் ஆண்டு முதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இது நிறைவேற்றப்படாமல் ஆண்டின் போது வீடியோ தொகுப்பிற்காக ஓர்

இயந்திரம் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்டு வாடகையாக ரூபா 202,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 1.12 மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | பதவியணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 11 | 10 | 01 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | 02 | - | - |
| (iii) | இரண்டாம் நிலை | 68 | 39 | 31 | 02 |
| (iv) | ஆரம்ப நிலை | 19 | 18 | 01 | - |
| (v) | ஏனையோர் (அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | 40 | 42 | - | 02 |
| | மொத்தம் | 140 | 111 | 33 | 04 |

மேற்குறித்த பதவியணியின் தகவல்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் இறுதியில் 33 வெற்றிடங்கள் நிரப்புவதற்காக அமைச்சு தவறியிருந்தது.

(ii) ஆட்சேர்க்கப்பட்டிருந்த மிகையான ஊழியர்களின் எண்ணிக்கை தொடர்பாக முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்காக அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2011 ஆம் ஆண்டு முதல் அமைச்சின் கீழ் காணப்படும் திணைக்களமொன்றின் எழுதுவினைஞர், நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், அலுவலகப் பணி உதவியாளர், போன்ற பதவியணி அமைச்சின் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

## 2. தலைப்பு 232 – சிறைச்சாலைகள் திணைக்களம்

---------------------------------------------------------------------------------------------------
-

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

------------------------------------------------

சிறைச்சாலைகள் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணைக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 ஒக்டோபர் 31 ஆம் திகதி திணைக்களத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தது.

### 2.2 கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------------------

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணைக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும்

நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய உள்ளகக்கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**2.3 கணக்காய்வு அவதானிப்புகள்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிஅறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பன இதன் (அ) முதல் (உ) வரையான அவதானிப்புக்கள் மற்றும் 2.4 முதல் 2.9 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகள் என்பவற்றை தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டன.

**(அ) ஏடுகளும் பதிவேடுகளும் பேணப்படாமை**

திணைக்களத்தால் பின்வரும் பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிராமை தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| பதிவேட்டு வகை | உரிய பிரமாணங்கள் |
|---|---|
| நட்டங்கள் இழப்புகள் பதிவேடு | நிதிப் பிரமாணம் 110 |
| நிலையான சொத்துப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 502(2) மற்றும் 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

**(ஆ) எல்லைகள் பின்பற்றப்படாமை**

திணைக்களத்தால் வணிக முற்பணக் கணக்கு நடவடிக்கைகளுக்குரித்தாக பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பின்வரும் எல்லைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

| **விடய இலக்கம்** | **வரவு மீதி** | |
|---|---|---|
| | **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளவாறானது** |
| | **ரூபா** | **ரூபா** |
| 23202 | 30,000,000 | 26,311,348 |

**(இ) பாதீட்டு முரண்கள்**

06 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த காரணத்தால் ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்து சேமிப்புகள் அச் செலவின விடயங்களுக்கு உரித்தான தேறிய ஏற்பாட்டின் 20 சதவீதத்தித்திலிருந்து 99 சதவீதம் வரையான வீச்சளவைக் கொண்டிருந்தது.

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 23201 விடய இலக்க முற்பணக் கணக்கு தொடர்பாக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்தினத்திற்கு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 8,109,355 ஆகக் காணப்பட்டது.

(ii) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு மீதி மற்றும் திறைசேரிப் புத்தகங்களின் படியான மீதியை ஒப்பிடுகையில் ரூபா 308,907 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(உ) வணிக முற்பணக் கணக்கு

திணைக்களத்தால் செயற்படுத்தப்பட்டிருந்த சிறைச்சாலைகள் தொழில்நுட்ப மற்றும் விவசாய நடவடிக்கைகள் தொடர்பான வணிக

முற்பணக் கணக்கு தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முறையான வகையில் கணக்கீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிராமையால் மஹர வெலிகட மற்றும் அநுராதபுரச் சிறைச்சாலைகளின் கொள்வனவு, விற்பனை மற்றும் இருப்புகள் தொடர்பான பற்றாக்குறை நிலவியதுடன் இதனால் தேறிய இலாபத்திற்குத் தாக்கம் நேர்ந்திருந்தது.

(ii) மஹர சிறைச்சாலையில் தையல் பிரிவின் இறுதி இருப்பு பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்படாமல் பேரேட்டில் குறிப்பிடப்பட்ட மீதியை அடிப்படையாகக் கொண்டு காண்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டின் போது பயன்படுத்தப்பட்டிருந்த ரூபா 121,745 பெறுமதியான மூலப்பொருட்கள் பேரேட்டில் குறிப்பிடப்பட்ட மீதியிலிருந்து கழிக்கப்பட்டிராமையால் இறுதி இருப்பு அதிகமாக இருந்தமையால் தனிக் கணக்கில் மூலப்பொருட் கிரயம் மறைப் பெறுமதியைக் கொண்டிருந்தது. கைத்தொழில் பிரிவில் ரூபா 204,978 தொகையான விற்பனை, இருப்பிலிருந்து அகற்றப்பட்டிராமையாலும் விற்பனையாகக் கணக்கீடு செய்யப்பட்டிராமையாலும் ரூபா 204,978 தொகையான நட்டம் காண்பிக்கப்பட்டிருந்தது.

(iii) வெலிகட சிறைச்சாலையின் வாகனத் தரிப்பிடப் பிரிவிலிருந்து ரூபா 427,497 தொகையான பெறவேண்டிய வருமானம் கணக்கிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. தும்புத் தடிக் கைத்தொழிற் பிரிவிற்கு ரூபா 396,436 தொகையான கடன் கொள்வனவுகள், கணக்கீடு செய்யப்பட்டிராமை மற்றும் அத் தொகை இறுதி இருப்பிற்கு உள்ளடக்கப்பட்ட காரணத்தால் இது தவறாக ஆண்டின் தேறிய இலாப அதிகரிப்புத் தொடர்பில் தாக்கமளித்திருந்தது.

**2.4 சொத்துக்களின் முகாமைத்துவம்**

**விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்**

கீழே வகைப்படுத்தப்பட்டவாறு சில சொத்துக்கள் விளைவற்று அல்லது குறைவான பயன்பாட்டுடன் நிலவியமை தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(அ) அநுராதபுரம் சிறைச்சாலைகள் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்த அக்றிமெக் கைஉழவு இயந்திரம் மற்றும் காற்றியக்க இயந்திரம் பல வருட காலமாக செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன் அவற்றைக் கைதவிர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அநுராதபுரம் சிறைச்சாலைகள் வளாகத்தில் வான் ஒன்று சிதைவடைந்த நிலையில் காணப்பட்டதுடன் அவ் வாகனத்திற்குரித்தான ஆவணங்களும் நிறுவகத்திடம் இருக்கவில்லை.

**2.5 இணங்காமைகள்**

**(அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசீலனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் விபரிக்கப்பட்டு கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | |
| | (i) நிதிப் பிரமாணம் 104 | 4,353,265 | நட்டங்கள் மற்றும் இழப்புகள் தொடர்பான பிரமாணங்களின் பிரகாரம் ஆய்வுகள் நடாத்தப்பட்டு அறிக்கைகள் |

| | | | |
|---|---|---|---|
| | | | சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப் பிரமாணம் 110 | 3,559,134 | ஏற்பட்டிருந்த சகல நட்டங்கள் மற்றும் இழப்புகள் பதிவேட்டில் பதியப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப் பிரமாணம் 502(ஆ) | 60,875,367 | சிறைச்சாலைகள் தொழில்நுட்ப மற்றும் விவசாய நடவடிக்கைகள் தொடர்பான முற்பணக் கணக்கில் பெறவேண்டிய பணம் தாமதமின்றி சேகரித்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) சிறைச்சாலைகள் திணைக்களத்தின் நிரந்தரக் கட்டளைகள்

------------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| (i) | நிரந்தரக் கட்டளை 673 மற்றும் 685 | - | சிறைக் கைதிகளின் நன்னடத்தை காரணமாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட இலட்சனைகள் 3 அல்லது நான்கைக் கொண்டவர்கள் வெளியிடங்களில் வேலைகளுக்காக உகந்தவர்களெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், கடுமையான குற்றங்களுடன் தொடர்புடையவர்களை வெளி வேலைக் குழுக்களில் ஈடுபடுத்தப்படுவதனால் தப்பியோடும் சந்தர்ப்பங்கள் அறிக்கையிடப்பட்டிருந்தன. |
| (ii) | நிரந்தரக் கட்டளை 911 | - | பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் சகல அறுவடைகளும் உள்ளடக்கப்பட்ட பதிவேடொன்று பேணப்பட வேண்டிய போதிலும், அநுராதபுரச் சிறைச்சாலையில் அத்தகைய ஓர் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

(iii) நிரந்தரக் கட்டளை 914 - அநுராதபுரச் சிறைச்சாலையில் மஹர சிறைச்சாலைக்கு உரித்தான மீதிரிகல மற்றும் கந்தேவத்த முகாம்களின் விலங்கின இருப்புப் பதிவேடு நிரந்தரக் கட்டளையில் குறிப்பிடப்பட்ட வகையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) நிரந்தரக் கட்டளை 909 (ஏ) மற்றும் 909 (பீ) - பண்ணை தொடர்பான ஓர் கோவை தயாரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவு தொடர்பான விபரமும் தகவல்களும் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் அநுராதபுரச் சிறைச்சாலையில் அத்தகைய ஓர் கோவை பேணப்பட்டிருக்கவில்லை.

**2.6.1 செயற்திட்ட அமுலாக்கலிலான நலிவுகள்**

திணைக்களத்தின் செயற்திட்ட அமுலாக்கல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாது கைவிடப்படல்

குருவிட்ட சிறைச்சாலைக்கு உத்தியோகபூர்வ இல்லமொன்றை நிர்மாணிப்பதற்கும் மெகசின் சிறைச்சாலையின் சமையலறை நிர்மாணிப்பதற்காகவும் 2001, 2004 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 6,845,500 தொகையான முற்பணம் கட்டிடத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அச் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயதிட்டம் மேற்கொள்ளப்படுவதிலான தாமதம்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நகரை அண்மித்த சிறைச்சாலைகள் மாற்றும் செயற்திட்டத்தின் கீழ் மஹர, வட்டரெக்க மற்றும் களுத்துறை சிறைச்சாலைகளின் நிர்மாணிப்பு நடவடிக்கைகளுக்காக வருடாந்தப் பாதீட்டு மதிப்பீட்டில் ரூபா 355 மில்லியன் தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அச் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) கொழும்பு சிறைச்சாலைகள் மாற்றப்படும் செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாடுகளில் ரூபா 240.3 மில்லியன் தங்கல்ல அங்குனகொலபெலஸ்ஸ புதிய சிறைச்சாலைகள் நிர்மாணிப்புச் செயற்திட்டத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. இதன் படி, அச் செயற்திட்டத்திற்கு 2013 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த ஏற்பாடு ரூபா 355 மில்லியன் தொகையாகக் காணப்பட்ட போதிலும் 2013 ஆம் ஆண்டின் போது அச் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் முன்னேற்றமடைந்திராத செயற்திட்டம்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வாரியபொல சிறைச்சாலையில் 500 கைதிகளுக்காக இரண்டு மாடி சிறை அறைகள் நிர்மாணிக்கப்படுவதற்கு 2008 ஆம் ஆண்டின் போது ரூபா 8,500,000 தொகையான மொத்தக் கிரயம் மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், இச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்படுகையில் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக 2013 திசெம்பர் அளவில் ரூபா 5.5 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அந்நாள் வரையில் மொத்த நிர்மாணிப்பில் 40 சதவீதமளவிலான கட்டிடத்தில் 6 அடி உயர அளவு மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

(ii) வவுனியா சிறைச்சாலையில் உள்ள கைதிகளுக்காக இரண்டு மாடிக் கட்டிட நிர்மாணிப்பிற்காக 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 29.68 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் அதன் திட்டத்தை மாற்றி கீழ் மாடியில் சமையலறை மற்றும் மேல் மாடியில் உத்தியோகத்தர் ஓய்வறையும் நிர்மாணிக்கப்படுவதனால் கைதிகளுக்கு போதிய இடவசதிகள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.7 வங்கி கணக்கு பேணப்படுவதிலான குறைபாடுகள்**

---

**செயற்பாடற்ற வங்கிக் கணக்குகள்**

---

சிறைச்சாலைக் கைதிகளின் சம்பளத்தில் 10 சதவீதப்படி பெற்றுக்கொள்ளப்பட்டு சிறைச்சாலைகள் பரிசூதிய நிதியம் எனும் பெயரில் அரச வங்கி ஒன்றில் கணக்கொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அக் கணக்கில் ரூபா 3,832,383 தொகையான ஓர் மீதியொன்று விளைவற்றுக் காணப்பட்டது. இக் கணக்கிற்குக் கிடைக்கப்பெறும் வருமானங்கள் செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும் மாதாந்தக் கணக்கு விபரமும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.8 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

---

**அரசாங்க கொள்வனவு நடைமுறை வழிகாட்டி மீறப்படல்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தும்பறை சிறைச்சாலைக்கு பொயிலர்கள் இரண்டும் பாத்திரங்கள் கொள்வனவு செய்வதற்கு ரூபா 12 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் இதற்காக விபரமான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு கொள்வனவுக் குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. பொயிலர்கள் மாத்திரமின்றி இதனைப் பொருத்தும் நடைமுறை தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டிராமையால் செயற்திட்டம் தாமதமாகியிருந்ததுடன் விலைகள் மதிப்பீட்டிற்கு உட்பட்டிருந்த போதிலும் இரு மனுதாரர்கள் சமர்ப்பித்த பூரணமற்ற விலைக் கூறல்களை அடிப்படையாகக் கொண்டே நியாயமான மனு மதிப்பீடொன்று இன்றி ரூபா 30.6 மில்லியன் தொகைக்கு

மனுதாரரிடமிருந்தது கொள்வனவு செய்யப்பட்டிருந்தது பொயிலர் பொருத்தப்படும் நடைமுறை முறைப்படி திட்டமிடப்பட்டிராமையால் சமையலறையின் சில நிர்மாணிப்புகளை மாற்றியமைக்க நேர்ந்தது. பொயிலர் பொருத்தப்பட்டதை அடுத்து அவற்றிற்கு வேறான உராய்வு நீக்கி எண்ணெய் வகையொன்று பயன்படுத்தப்பட்டதன் காரணமாக ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறின் காரணமாக கைதிகளின் உணவு தயாரிக்கும் நடைமுறையைத் தொடர்ந்து மேற்கொள்ள முடியாதிருந்தது. தற்போது ஒரு பொயிலர் செயலிழந்த நிலையில் காணப்பட்டது.

(ii) வெலிகட மற்றும் பல்லேகலே சிறைச்சாலை வாகனத் தரிப்பிடங்களுக்கு ரூபா 6,174,000 தொகையான 4 பாரம் தூக்கிகளும் இவற்றிற்குரித்தான உதிரிப்பாகங்களும் மட்டுப்படுத்தப்பட்ட விலைக் கோரலின் கீழ் செயற்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அரசாங்கக் கொள்வனவு நடைமுறை வழிகாட்டிக் கோவையில் குறிப்பிடப்பட்ட வழிகாட்டலுக்கு முரணாக கொள்வனவுக் குழுவிற்கு மட்டுப்படுத்தப்பட்ட விலைக் கோரலின் கீழ் கொள்வனவு செய்யப்படக் கூடிய ஆகக் கூடுதலான எல்லை ரூபா 2 மில்லியன் தொகையான போதிலும், அவ் எல்லை மீறப்பட்டு கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 3 மில்லியன் தொகைக்கு மேற்பட்ட பெறுமதியிலான 02 பாரம் தூக்கிகள் மின்சக்தி போதுமான அளவில் கிடைக்கப்பெற்றிராமையால் பல்லேகலே சிறைச்சாலையில் விளைவற்றுக் காணப்பட்டது.

(iii) பல்லேகலே சிறைச்சாலையின் பாதணி உற்பத்திப் பிரிவு மூடப்பட்டு கூடுதலான பெறுமதியிலான இயந்திரங்களும் மூலப்பொருட்களும் பல்லன்சேன பராயமடையாத குற்றவாளிகளின் சீர்திருத்த நிலையத்திற்கு மாற்றப்பட்டிருந்த போதிலும் பாதணி உற்பத்தி நடவடிக்கைகள் தாமதமடைந்திருந்தன.

**2.9 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 95 | 38 | 57 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 53 | 21 | 32 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 7,098 | 5,565 | 1,533 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 364 | 289 | 75 | - |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | - | 15 | - | 15 |
| | மொத்தம் | **7,610** | **5,928** | **1,697** | **15** |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் இறுதியில் 1,697 வெற்றிடங்கள் நிரப்பப்படுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ii) ஆட்சேர்க்கப்பட்டிருந்த மிகையான பதவியணி தொடர்பாக முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுவதற்கு தவறியிருந்தது.

**3. ஒதுக்கீட்டுத் தலைப்பு 326 – சமூக அடிப்படையிலான சீர்திருத்தத் திணைக்களம்**

---

சமூக அடிப்படையிலான சீர்திருத்தத் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 செப்தெம்பர் 23 ஆம் திகதி திணைக்களத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச்

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தது.

**3.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய உள்ளகக்கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**3.3 கணக்காய்வு அவதானிப்புகள்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிஅறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், சமூக அடிப்படையிலான சீர்திருத்தத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பன இதன் (அ) முதல் (ஆ) வரையான அவதானிப்புக்கள் மற்றும் 3.4 முதல் 3.9 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகள் என்பவற்றை தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

**(அ) ஏடுகளும் பதிவேடுகளும் பேணப்படாமை**

திணைக்களத்தால் நிதிப் பிரமாணம் 110 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நட்டங்கள் இழப்புகள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பாதீட்டு முரண்கள்**

05 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த காரணத்தால் ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்து சேமிப்புகள் அச் செலவின விடயங்களுக்கு உரித்தான தேறிய ஏற்பாட்டின் 31 சதவீதத்தித்திலிருந்து 70 சதவீதம் வரையான வீச்சளவைக் கொண்டிருந்தது.

## 3.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 3.4.1 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் படி, வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4.2 உள்ளகக் கணக்காய்வு

திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிராததுடன் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் சான்றுறுதிப்படுத்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் போதியளவில் உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்படுத்தல்

திணைக்களத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு முறையான வகையில் செயற்பட்டிருக்கவில்லை. அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் பொதுக் கூட்டங்களில் மாத்திரம் கலந்துகொள்ளப்பட்டிருந்தது.

## 3.5 தீர்க்கப்படாத பொறுப்புகள்

சமூக அடிப்படையிலான சீர்திருத்தத் திணைக்களத்தால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 1 வருடத்திற்குக் குறைவான காலம் முதல் நிலவிவரும் தீர்க்கப்படாத பொறுப்புகளின் மீதி ரூபா 603,311 ஆகக் காணப்பட்டது.

## 3.6 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நிதிப் பிரமாணம் 447(2) | செலவினப் பேரேட்டின் ஒவ்வொரு செலவின விடயத்தின் கீழ் காண்பிக்கப்பட்ட ஏற்பாடுகள் சரியென பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 447(3) | மேலதிக ஏற்பாட்டுப் பெறுவனவு சிவப்பு மையால் குறிப்பிடப்பட்டு மூல ஏற்பாடு சேர்த்துக் காண்பிக்கப்பட்டிராததுடன் நிதிப் பிரமாணம் 66 மற்றும் 69 ஆம் ஏற்பாடுகளின் கீழ் ஏற்பாடு வேறு செலவின விடயத்திற்கு மாற்றப்படுகையில் ஏற்பாடுகள் குறைக்கப்பட்ட செலவின விடயங்களின் மொத்த ஏற்பாடுகளும் குறைத்துக் காண்பிக்கப்பட்டிராததுடன் இது தொடர்பான பதவிநிலை உத்தியோகத்தரின் கவனமும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப் பிரமாணம் 447(8) | செலவினப் பேரேடு சமப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) அரச நிதிச் சுற்றறிக்கை | |
| 2009 திசெம்பர் 09 ஆம் திகதிய 441 ஆம் இலக்க சுற்றறிக்கை | வருடாந்த பொருள்மெய்மையாய்வு 2014 மார்ச் 15 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட அவ் |

அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் இதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.7 செயற்திட்டம் செயற்படுத்தலிலான நலிவுகள்

திணைக்களத்தால் பின்வரும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் அச் செயற்திட்டம் நிறைவேற்றப்படாது கைவிடப்பட்டிருந்தது.

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவினம் | கைவிடப்பட்டமைக்கான காரணம் |
|---|---|---|---|---|
| | ரூபா | | ரூபா | |
| குருநாகல் சமூக அடிப்படையிலான சீர்திருத்த நிலைய நிர்மாணிப்பு | 1,333,472 | 2012.12.12 | 208,417 | நிர்மாணிப்பு வளாகத்தை அரசாங்கத்திற்குக் கையேற்கப்படுவதிலுள்ள சிரமங்கள் |

### 3.8 செயலாற்றல்

2013 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி சமூக அடிப்படையிலான சீர்திருத்த திணைக்களத்தின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

போதியளவில் மேற்கொள்ளப்படாத முக்கிய செயற்பாடுகள்

சமூக அடிப்படையிலான சீர்திருத்த திணைக்களத்தால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காண்பிக்கப்பட்ட செயற்திட்டச் செயற்பாடுகள் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு போதியளவில் மேற்கொள்ளப்பட்டிராத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

விபரம் பின்வருமாறாகும்.

(i) சமூக அடிப்படையிலான சீர்திருத்தச் செயற்பாட்டை உறுதிப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நீதிவான் மற்றும் நீதிபதிகளை அறிவூட்டும் 20 செயலமர்வுகள் நடாத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 12

செயலமர்வுகள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்ததுடன் திணைக்களத்தின் சகல செயற்பாடுகளையும் கணனி மயமாக்கும் செயற்திட்டத்தின் செயற்பாடுகளும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) சமூக சேவைகள் செயற்திட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 52 விவசாயப் பயிர்ச்செய்கைச் செயற்திட்டங்களும் 20 நாற்று மேடைகளும் காடு வளர்ப்பு செயற்திட்டங்களும் செயற்படுத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 40 விவசாயச் செயற்திட்டங்களும் 18 நாற்று மேடைகளும் காடு வளர்ப்பு செயற்திட்டங்களும் செயற்படுத்தப்பட்டிருந்தன.

(iii) மனிதவள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மூன்று வேலைப் பரீட்சகர்களும் ஏனைய மூன்று பதவியணியினருக்காகவும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் இரு வேலைப் பரீட்சகர்களுக்கும் ஏனைய பதவியணியில் ஒருவருக்கும் மாத்திரமே பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 3.9 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | பதவியணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 16 | 04 | 12 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 102 | 99 | 03 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 454 | 292 | 162 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 11 | 05 | 06 | - |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | - | 05 | - | 05 |
| | மொத்தம் | **583** | **405** | **183** | **05** |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதியில் 183 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ஆ) முறையற்ற விதத்தில் வேறு தரப்பினருக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்

------------------------------------------------------------------------------------------------------------------------

சமூக அடிப்படையிலான சீர்திருத்த திணைக்களத்தால் மீளாய்வாண்டின் போது வேறு தரப்பினருக்கு முறையற்ற விதத்தில் விடுவிக்கப்பட்டிருந்த மனித வளம் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| பதவியணி வகை | எண்ணிக்கை | வேறு தரப்பினர் | விடுவிக்கப்பட்டிருந்த காலப்பகுதி |
|---|---|---|---|
| எழுதுவினைஞர் | 02 | புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு | 2011 ஆம் ஆண்டு முதல் இது வரை |
| ஊழியர் | 01 | மேற்படி | மேற்படி |

எழுதுவினைஞர் பதவிகளில் வெற்றிடம் நிலவிய போதிலும் இவ் உத்தியோகத்தர்கள் மேற்குறித்த அமைச்சின் உத்தியோகபூர்வ கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டு சமூக அடிப்படையிலான சீர்திருத்த திணைக்களத்திடமிருந்து சம்பளத்தைப் பெற்றுக்கொள்வதுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 835,634 தொகை சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது.